Source: *Tamil Murasu*, p3
Date: 23 October 2017

கதை சொல்லி சிரிக்கவைக்கும் இளையர்கள்

வில்சன் சைலஸ்

சோகம், விரக்தி, கோபம் என பல்வேறு உணர்ச்சிகளுடன் நகைச்சுவையை இணைத்து, சொல்லவரும் கருத்தை முத் தமிழின் சுவையோடு சொல்லும் கலை கதாகாலட்சேபம். நவம்பர் 4ஆம் தேதி சிங்கப்பூர் எழுத்தாளர் விழாவில் சிறப்பு அங்கம் வகிக்கும் 'நாட்டுப்புறக் கலை வளர்க்கும் கதை மரபு' நிகழ்ச்சியை நகைச் சுவை நிறைந்த கதாகாலட்சேபம் மூலம் மெருகேற்றியுள்ளனர் சரவணன் சண்முகம், சையத் அஷரத்துல்லா இருவரும்.

பாஸ்கர் கலைக் கழகத்தின் 'சிலம்பு செல்வி' தெருக்கூத்து, அவாண்ட் நாடகக் குழு வழங்கும் 'பீடம்' ஓரங்க நாடகம், தமிழகத் தைச் சேர்ந்த டாக்டர் பாரதி திருமகன் படைக்கும் 'குதிரை பந்தய லாவணி' வில்லுப்பாட்டு ஆகிய மூன்று அங்கங்களையும் இணைக்கிறது இவர்களின் கதாகாலட்சேபம்.

'அறம்' என்ற கருப்பொருளில் பாரம்பரிய முறையில் கதை சொல்வதை மையமாகக்கொண்ட இந்நிகழ்ச்சிக்கு கதாகாலட்சேபம் வழி மேலும் சுவைகூட்ட உள்ளனர் 23 வயது சரவணன் சண்முகமும் 28 வயது சையத் அஷரத்துல்லாவும்.

இவர்களுக்குக் கதாகாலட் சேபத்தை அறிமுகம் செய்து வைத் தது சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம். பல்கலைக்கழகத்தின் தமிழர் பேரவை ஈராண்டுக்கு ஒரு முறை படைக்கும் 'சங்கே முழங்கு' கலை நிகழ்ச்சியில் வித்தியாசமான பாணியில் சரவணனும் சையத்தும் வேறு சில மாணவர்களும் இணைந்து கதாகாலட்சேபத்தை மேடையேற்றினார்கள்.



கடந்த 2015ல் நடந்த 'சங்கே முழங்கு' நிகழ்ச்சியில் சையத், சரவணன்.

படம்: சரவணன்

கருத்துகளை மக்களிடம் கொண்டு சேர்க்க கதாகாலட்சேபம் சிறந்த உத்தி எனக்கூறும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக மருத்துவத் துறை மாணவரான சரவணன், இத்தகைய பாரம் பரியக் கலையில் தொடர்ந்து ஈடு படுவதில் ஆர்வம் செலுத்துகிறார்.

இயல், இசை, நாடகம் ஆகிய வற்றை ஒருசேர மேடையேற்றும் கதாகாலட்சேபத்தை எழுத்தாளர் விழாவில் அரங்கேற்றுவது பெரு மிதம் அளிக்கிறது என்ற சையத், 'அறம்' என்ற விசாலமான கருத்தைக் கதாகாலட்சேபம் எளிமையான விதத்தில் மக்களிடம் கொண்டு சேர்க்க கைகொடுக்கும் என நம்புகிறார்.

தொடக்கக் கல்லூரி நாட்கள் முதல் கதாகாலட்சேபம் நிகழ்த்தி வரும் சையத்துக்கு நகைச்சுவை யோடு பேசுவது கைவந்த கலை.

வசனங்களாலும் பாவனைக ளாலும் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்துவதுடன் பாடல்களி லும் அதை வெளிக்கொண்டு வரு வது அவசியம் என்றார் சையத்.

"இதற்கு, பலரும் அடிக்கடி அசைபோடும் பாடல்களையும் நகைச்சுவை வசனங்களையும் கவனித்து அவற்றை உள்வாங்கிக் கொள்வது முக்கியம்," என்ற சரவணன், திரைப்படப் பாடல் களின் மெட்டுகளில் சொந்த வரி களை இயற்றி அதைப் பாடுவது நகைச்சுவைத்தன்மை கொண்ட தாக இருக்கும் என விளக்கினார்.

அவ்வகையில் இந்நிகழ்ச்சிக்கு கிட்டத்தட்ட எட்டுப் பாடல்களின் மெட்டுகளுக்கு வரிகள் அமைத் திருப்பதாகக் கூறினார் சரவணன்.

யதார்த்த சூழலையே கதா காலட்சேபம் பெரும்பாலும் பிரதி பலிப்பதால் இயல்பான முறையில் வசனங்களுடன் நடிப்பை வெளிப் படுத்தவேண்டும் என்றார் சையத்.

4ஆம் தேதி நடைபெறும் 'நாட்டுப்புறக் கலை வளர்க்கும் கதை மரபு' நிகழ்ச்சிக்கான கட்டணம் $20.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.